29th October 1962]

திருமதி டி. என். அனந்தநாயகி : இம்மாதிரி நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்பொழுது தகராறு இல்லாத இடங்களிலேகூட பணம் கொடுப்பது 6 வருஷம், 7 வருஷம் தாமதப்படுகிறது. கொடுக்கும் பணத்தை குறைவாக இருந்தாலும்கூட, அந்தப் பணம் கூட காலாகாலத்தில் கொடுக்கப்படாமல் 6, 7 ஆண்டுகள் தாமத மாகக் கொடுக்கப்படுகிறது. அம்மாதிரியில்லாமல் உடனடியாக அந்தப் பணம் கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி புகார்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் சர்க்காருக்கு எழுதி அனுப்பியிருக் கிருர்களா ? அப்படி எழுதி அனுப்பியிருந்தால், அதை மீண்டும் தெரிவித்தால் பதில் சொல்ல முடியும்.

காளிங்கராயன் வாய்க்கால் திட்டமும் நொய்யல் திட்டமும்

* 861 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தின்மேல் காளிங்கராயன் வாய்க் கால் திட்டமும், திருச்சி மாவட்டத்தில் நொய்யல் திட்டமும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

(இ) அவைகளின் வேலை ஆரம்பிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) It has not been found feasible to include these schemes in the Third Five-Year Plan.

Employees of local bodies (scales of pay).

* 862 *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state whether there is any proposal to remove the difference in the rate in the scales of pay of lower division clerks employed by Government and local bodies?

THE HON. SRI S. M. A. MAJID : No, Sir.

திரு. வை. சங்கரன் : பொதுவாக முனிசிபல் உத்தியோகத்தில் இருக்கிற ஊழியர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கு உள்ள 'சர்விஸ் கண்டிஷன்ஸ்', சம்பளம் முதலியவைகள் கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்று ஒரு இடத்திலே மந்திரி அவர்களால் சொல்லப்பட்டது. அது எவ்வளவு சிக்கிரம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்பொழுது பொருளாதார அடிப்படையில் கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது. பல தடவை இதைச் சரி செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டும், பரிசீலனை செய்யப்பட்டும், இது ஏற்கப்படவில்லை.